**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2022 |
| Name | : Rathinaraj |
| P.W. | : 6 |
| Father Name | : Philip Rathinam |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**17.07.2026**

**எதிரிகள் 1 முதல் 6 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொழுமம் மட்டை மில்லில் வேலை செய்து அங்கேயே குடியிருக்கிறேன். எனது பூர்வீகம் விருதுநகர் மாவட்டம். தேதி, மாதம் ஞாபகம் இல்லை சுமார் 3 வருடங்களுக்கு முன்பு இரவு நேரம் நான் துாங்கிக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது நான் வெளியே வந்து பார்த்தேன் யாரையும் காணவில்லை. மறு நாள் போலீசார் வந்து என்னிடம் வரைபடம் வரைந்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 13.12.2021ம் தேதி இரவு சுமார் 10.00 மணி அளவில் நான் வேலை செய்து கொண்டிருக்கும் மட்டை மில் வளாக பகுதியில் அங்கிருந்த ஜெகதீஷ் குமாரையும் அவரது மகள் கௌசல்யாவையும் எதிரிகள் கெட்ட வார்த்தையால் திட்டி, மண் வெட்டியால் தாக்கி கல்லால் அடித்து பின்னர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உரிமையாளர் ராசுவின் TN 78 Q 0994 bajaj CT 100 பைக்கை மண் வெட்டியால் சேதப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தது குறித்து போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேன் என்றும் பின்னர் மறு நாள் காலை 09.00 மணி அளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த போது நானும், என்னுடன் சுப்பிரமணியும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும் பின்னர் போலீசார் சம்பவ இடத்தில் சுமார் 2 அடி நீளமுள்ள 2 குச்சிகள் மற்றும் கைக்கு அடக்கமான 3 கற்கள் மற்றும் சுமார் 2 ½ நீளமுள்ள அரிவாளின் இரும்பு பகுதி மற்றும் சுமார் 1 ¾ அடி கூடிய மரக்கைப்பிடியுடன் கூடிய மண் வெட்டி ஒன்று மற்றும் மேற்படி இருசக்கர வாகனத்தின் முகப்பு விளக்கின் பாகங்கள் இரண்டை சம்பவ இடத்தில் இருந்து போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய போது நானும், சுப்பிரமணியும் சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.17 18:53:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்